**THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION**

**FORM -3**

**MINUTES OF THE COUNCIL MEETINGS**

**(See rule 5 and Serial Number 3 of Appendix 1)**

## அவசரக் கூட்டப்பொருள்

2015ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4ஆம் நாள் செவ்வாய்க் கிழமை மாலை 4.00 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை I பிரிவு எண் 3(2)ன்கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|
| 04.08.2015 | **1)** தமிழக அரசால் பொதுமக்கள் நலனுக்காக அறிவிக்கப்பட்டுள்ள பண்ணை பசுமை காய்கறி திட்டத்தின் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் 600 சதுரஅடி பரப்பளவில் பண்ணை பசுமை காய்கறி விற்பனை கூடம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். எப்1/2232/2015 மே.ம. | 122)அலுவலகக்குறிப்புபடி அனுமதிக்கப் பட்டது. |
| | **2)**உள்ளாட்சி அமைப்புகளில் நகர்ப்புற உள்கட்டமைப்பு வசதிகளை சர்வதேச தரத்திற்கு இணையாக மேம்பாடு செய்ய இந்தியாவில் 100 ஸ்மார்ட் நகரஙகளை உருவாக்க மத்திய அரசால் ஸ்மார்ட் சிட்டி (Smart City) திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. அதன்பேரில் தமிழ்நாட்டில் உள்ள 10 மாநகராட்சி பகுதிகளை ஸ்மார்ட் சிட்டியாக மாற்றுவதற்கு திட்டம் வகுக்கப்பட்டு ஸ்மார்ட் சிட்டி திட்டம் தொடர்பாக வழிகாட்டு நெறிமுறைகள் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>எனவே மேற்படி ஸ்மார்ட் சிட்டி (Smart City) திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு தூத்துக்குடி மாநகராட்சியில் உள்கட்டமைப்பு பணிகள் மற்றும் புனரமைப்பு பணிகள் மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் இசைவினை தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு –** மாமன்றம் ஒப்புதல் வழஙகலாம். இ1/3209/2015 | 123) அலுவலகக்குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது. |

3)நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் எண்.14094/2014/இ3, நாள் 29–05–2015 ல் மாநகராட்சி வார்டு பகுதிளில் பழுதடைந்த சாலைகள், பாதாள சாக்கடை திட்டப்பணிகளுக்கு தோண்டப்பட்ட சாலைகள் சீரமைத்தல் போன்ற பணிகள் “ சிறப்பு சாலை திட்டம்” 2015–2016 இன் (Special Road Programme ) கீழ் இம்மாநகரட்சிப் பகுதியில் உள்ள கீழ்க்கண்ட 70 சாலைகளில் ரூ.2785.06 இலட்சம் மதிப்பீட்டில் அரசு மான்யம் பெற்று பணிகள் மேற்கொள்ளவும், பிரேரணை அனுப்பவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத்தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | பக்கிள் ஓடை வடக்கு அணுகு சாலை பகுதியில்( ஆண்டாள் தெரு முதல் பொன்னகரம் வரை)தார் சாலை அமைக்கும் பணி மழைநீர் வடிகால் , சிறுபாலம் கட்டும் பணி | 110.00 |
| 2 | நந்தகோபாலபுரம் மெயின் ரோடு பகுதியில் தார் சாலை புதுப்பிக்கும் பணி | 24.50 |
| 3 | கிருஷ்ணராஜபுரம் 2வது மற்றும் 3வது தெரு பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 20.00 |
| 4 | செயின்ட் மேரிஸ் காலனி பகுதியில்(இணைப்பு சாலை கிருஷ்ணராஜபுரம்) தார் சாலை அமைக்கும் பணி | 26.50 |
| 5 | அன்னை தெரசா நகர் பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 54.00 |
| 6 | போல்பேட்டை வடக்கு மற்றும் தெற்கு பகுதியில் தார் சாலை புதுப்பிக்கும் பணி | 17.00 |
| 7 | முத்தம்மாள் காலணி 8வது தெரு பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 23.00 |
| 8 | இந்திரா நகர் 4வது தெரு,ஐயப்பன் நகர் 1வது தெரு மற்றும் 3வது தெரு, அன்னை இந்திரா நகர், தேவர் காலணி 7வது தெரு பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 55.08 |
| 9 | முத்தம்மாள் காலணி 1முதல் 7வது தெரு இணைப்பு சாலை தார் சாலை அமைக்கும் பணி | 28.08 |
| 10 | அழகேசபுரம் (ஆனந்தமஹால் எதிர்புறம்) தார்சாலை அமைக்கும் பணி மற்றும் மழைநீர் வடிகால், சிறுபாலம் கட்டும் பணி | 40.00 |
| 11 | தவசிநகர் கிழக்கு (மத்தி பகுதி வரை) பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி | 18.50 |
| 12 | சக்திவிநாயகர்புரம் 3வது தெரு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டும் பணி, சுந்தரவேல்புரம் 6வது தெரு பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி, | 37.50 |
| 13 | திரவியபுரம் மெயின்.ரோடு பகுதியில் தார் சாலை புதுப்பிக்கும் பணி | 14.90 |
| 14 | கிருஷ்ணராஜபுரம் கிழக்கு 6வது மற்றும் 7வது தெரு பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி மற்றும் மழைநீர் வடிகால் கட்டும் பணி | 40.00 |
| 15 | முத்துகிருஷ்ணாபுரம் மற்றும் பூபாலராயர்புரம் பகுதியில் தார் சாலை அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் கட்டும் பணி | 47.50 |
| 16 | தபால் தந்தி காலனி 1 முதல் 12 வது குறுக்குதெரு மற்றும் இணைப்புச்சாலை பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 46.75 |
| 17 | தபால் தந்தி காலனி கிழக்கு பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி மற்றும் மழைநீர் வடிகால், சிறுபாலம் கட்டும் பணி | 50.60 |
| 18 | அண்ணாநகர் 6வது தெரு பக்கிள்ஓடை மேற்கு பகுதியில் பேவர் | 17.30 |

124)அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | பிளாக்சாலை அமைக்கும் பணி | |
| 19 | பாலவிநாயகர் கோவில் தெருவில் தார் சாலை மேம்படுத்தும் பணி மற்றும் மழைநீர் வடிகால், சிறுபாலம் கட்டும் பணி | 90.00 |
| 20 | காமராஜ்நகர் மற்றும் குறுக்கு தெரு பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 32.00 |
| 21 | ஆட்டோ காலனி பகுதியில் பேவர் பிளாக் அமைக்கும் பணி | 10.50 |
| 22 | பிரையண்ட் நகர் 6வது தெருவில் தார் சாலை மேம்படுத்தும் பணி மற்றும் மழைநீர் வடிகால் கட்டும் பணி | 28.00 |
| 23 | பிரையண்ட் நகர் 3வது, 8வது தெரு மேற்கு பகுதி 9வது தெரு மத்தி பகுதியில் தார் சாலை மேம்படுத்தும் பணி | 26.40 |
| 24 | முனியசாமிபுரம், முனியசாமிபுரம் மேற்கு, லெவஞ்சிபுரம் 2வது குறுக்கு தெரு பகுதியில் தார் சாலை மேம்படுத்தும் பணி மற்றும் மழைநீர் வடிகால், சிறுபாலம் கட்டும் பணி | 75.00 |
| 25 | சிவந்தாகுளம் 2வது தெரு பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி மற்றும் லெவஞ்சிபுரம் 1வது தெரு தொடர்ச்சி பகுதியில் பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணி | 41.00 |
| 26 | டூவிபுரம் பண்டுகரை சாலை பகுதியில்(கே.வி.கே.நகர் பாலம் முதல் 3வது கேட் பாலம் வரை) கைப்பிடியுடன் கூடிய நடைபாதை அமைத்தல் மற்றும் சாலை அகலப்படுத்தி தார்சாலை மேம்படுத்தும் பணி | 173.00 |
| 27 | மில்லர்புரம் கிழக்கு பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 46.75 |
| 28 | கே.வி.கே.நகர் பக்கிள்ஓடை வடக்கு அணுகு சாலையில் தார் சாலை அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால், சிறுபாலம் கட்டும் பணி | 49.50 |
| 29 | டூவிபுரம் 1வது தெரு பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 29.00 |
| 30 | ராமசாமிபுரம் மற்றும் போல்டன்புரம் குறுக்கு சந்துபகுதியில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி மற்றும் மழைநீர் வடிகால், சிறுபாலம் கட்டும் பணி | 25.30 |
| 31 | போல்டன்புரம் 1வது மற்றும் ராமசாமிபுரம் தெரு பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 46.50 |
| 32 | தாமோதரநகர் 1வது தெரு பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 13.50 |
| 33 | நயினார் விளை கிழக்கு பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால்,சிறுபாலம் கட்டும் பணி | 17.10 |
| 34 | வி.எம், கோவில் தெரு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டும் பணி, தார் சாலை புதுப்பிக்கும் பணி | 27.50 |
| 35 | பூபாலராயர்புரம் பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 12.50 |
| 36 | டேவிஸ்புரம் மேற்கு மெயின் ரோடு பகுதியில் தார்சாலை புதுப்பிக்கும் பணி | 26.50 |
| 37 | செல்வீஜர் தெரு மற்றும் தெப்பக்குளம் தெரு பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 14.70 |
| 38 | வண்ணார் தெரு பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 17.50 |
| 39 | இரயில்வே ஸ்டேஷன் ரோடு பகுதியில் தார்சாலை அகலப்படுத்துதல் மற்றும் புதுப்பிக்கும் பணி | 19.50 |
| 40 | சிவந்தாகுளம் சந்து பகுதியில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால், சிறுபாலம் கட்டும் பணி | 19.40 |
| 41 | லயண்ஸ் டவுண் 1 முதல் 5வது தெரு பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 36.00 |
| 42 | லயண்ஸ்டவுண், அன்னைதெரசா காலணி மற்றும் பனிமயநகர் பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி | 28.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | 43 | தெற்குகாட்டன் ரோடு பகுதியில் தார் சாலை புதுப்பிக்கும் பணி | 45.10 | |
| | 44 | தாமஸ் ரோடு பகுதியில் தார் சாலை மற்றும் பேவர்பிளாக் அமைக்கும் பணி | 40.50 | |
| | 45 | எஸ்.பி.ஜி.கோவில் 2வது,3வது மற்றும் 4வது தெரு பகுதியில் பேவர் பிளாக் சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 40.00 | |
| | 46 | பாகம்பிரியாள் தெரு மற்றும் வடக்கு ரதவீதி சந்து பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி | 17.20 | |
| | 47 | ஜெயிலானி தெரு, கீழரதவீதி, வடக்கு ரதவீதி பகுதியில் தார் சாலை புதுப்பிக்கும் பணி | 14.00 | |
| | 48 | தந்திஆபிஸ் ரோடு பகுதியில் தார் சாலை புதுப்பிக்கும் பணி | 9.90 | |
| | 49 | காந்திநகர் பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி மற்றும் பேவர்பிளாக் சாலை , மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 26.30 | |
| | 50 | செயின்ட் ஜாண் தெரு, வாத்தியார் தெரு, கோவில் தெரு மற்றும் சைமன் தெரு பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி | 20.50 | |
| | 51 | குருஸ்புரம் பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி மற்றும் மழைநீர் வடிகால், சிறுபாலம் கட்டும் பணி | 22.70 | |
| | 52 | திரேஸ்புரம் முனியசாமி கோவில் தெரு பகுதியில் தார் சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி, திரேஸ்புரம் சிலுவை கோவில் கடற்கரை சாலை பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி | 39.50 | |
| | 53 | முனியசாமி கோவில் தெரு பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 22.50 | |
| | 54 | வி.இ.ரோடு(ரைஸ்மில் தெரு) பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி | 22.20 | |
| | 55 | முனியசாமி கோவில் தெரு மற்றும் மாடசாமி கோவில் தெரு (திரேஸ்புரம்) பகுதியில் தார் சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி, | 41.60 | |
| | 56 | மாடசாமி கோவில் தெரு (திரேஸ்புரம்)சந்து பகுதி மற்றும் ஜார்ஜ் ரோடு சந்து பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி, | 17.60 | |
| | 57 | திரேஸ்புரம் மெயின் ரோடு ( திரேஸ்புரம் முதல் பூபாலராயர்புரம்) பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 31.50 | |
| | 58 | கணேசன் காலனி மெயின் ரோடு முதல் என்ஜிஓ காலனி ஜஙஷன் மற்றும் பாரதி நகர் (குருவி மேடு) வரை தார் சாலை அமைத்தல் மற்றும் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி | 79.00 | |
| | 59 | கால்டுவெல் காலனி மற்றும் எஸ்.என்.ஆர். நகர் தெரு பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 67.00 | |
| | 60 | 3சென்ட் மெயின் ரோடு முதல் செல்சீனி காலனி ஜஙஷன்,மற்றும் அந்தோணியார்புரம் பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 60.00 | |
| | 61 | வீரநாயக்கன் தட்டு மெயின் ரோடு பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 94.50 | |
| | 62 | அய்யன் கோவில் மேயின் ரோடு பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி மற்றும் மழைநீர் வடிகால், சிறுபாலம் கட்டும் பணி | 63.00 | |
| | 63 | வடக்கு தெரு பகுதியில் தார்சாலை மேம்படுத்தும் பணி மற்றும் முஸ்லீம் தெரு பகுதியில் பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணி | 41.50 | |
| | 64 | சுந்தர் நகர் பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 88.20 | |
| | 65 | சாந்தி நகர், பாரதிநகர் மெயின் ரோடு மற்றும் குறுக்கு தெரு பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி மற்றும் மழைநீர் வடிகால், | 69.50 | |

| | | |
|---|---|---|
| | சிறுபாலம் கட்டும் பணி | |
| 66 | வேதக்கோவில் 1முதல் 4வது தெரு வரை மற்றும் பொன்னகரம், சண்முகபுரம் பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி மற்றும் மழைநீர் வடிகால், சிறுபாலம் கட்டும் பணி | 53.00 |
| 67 | கீதா நகர், சக்திநகர், குமாரசாமிநகர் 1வது தெரு முதல் தங்கமணிநகர், மற்றும் ஆதிபராசக்திநகர் பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 51.90 |
| 68 | சவேரியார்புரம் மேற்கு பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 49.50 |
| 69 | அபிராமி நகர் பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 27.50 |
| 70 | டி.சுனாமி காலனி பகுதியில் சிமெண்ட் சாலை மேம்படுத்தும் பணி | 53.00 |
| | மொ த் த ம் | 2785.06 |

மேற்கண்ட விபரப்படி 70 சாலைகளில் தார் சாலை, பேவர் பிளாக் அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டும் பணிகளுக்கு மதிப்பீடு தொகை ரூ. 2785.06 இலட்சத்திற்கு அரசுக்கு பிரேரணை சமர்ப்பித்து மான்யம் பெற்று பணிகள் செய்யவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> – மாமன்றம் அனுமதிக்கலாம் இ1 / 2414 / 2015

4)தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட ஜெயராஜ் ரோடு பிரதான சாலையில் தமிழகத்தின் முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் பாரத ரத்னா டாக்டர். எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவ வெண்கல சிலையினை அமைப்பதற்கும் தொடர்ந்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கும், அனுமதி அளிக்குமாறு எம்.ஜி.ஆர். சாரிட்டபுள் டிரஸ்ட் நிறுவனர் திரு. நிக்கோலஸ் கவியரசு என்பவரால் கோரப்பட்டுள்ளது.

ஜெயராஜ் ரோடு பிரதான சாலையில் முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவ வெண்கன சிலையினை அமைப்பதற்கு போக்குவரத்திற்கு இடையூறு இல்லையென மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் தடையின்மை சான்று பெற்று சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் மேலும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகு துறையின் 20–11–1998ம் தேதிய அரசாணை (நிலை ) 221ன் படி சிலை வெண்கலத்தால் அமைக்கப்பட வேண்டும் என்பதற்கும், சிலை பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு பணியினை சிலை அமைப்பவரே மேற்கொள்ளவும் உறுதி மொழி பெற்றும் சிலை வைக்கும் உத்தேசத்தினை சென்னை, நகராட்சி நிர்வாக இய்க்குநர் வழியாக அரசின் அனுமதி கோரி அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> . விண்ணப்பத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் மூலமாக அரசுக்கு அனுப்பி வைக்கலாம்.

ந.க.எண்.எப்1/2233/2015

மே.ம.

125)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

5)இம்மாநகராட்சியில் பணியாற்றும் நகர சுகாதார செவிலியர்கள், மகப்பேறு உதவியாளர்கள் ஆகியோர்களுக்கு 2015ம் வருடத்திற்கு சீருடைப்படி , அரசாணை எண். 236 நாள் 01.06.2009ன் படி வழஙகுவதற்கு தலா ரு. 750/– வீதம் 16 நகர சுகாதார செவிலியர்கள்

126) அலுவலகக்

| | | |
|---|---|---|
| | மற்றும் இரண்டு மகப்பேறு உதவியாளர்கள் ஆகியோர்களுக்கு தொகையாக ரூ 13,500/—ம் மேலும் நான்கு பகுதி சுகாதார செவிலியர்களுக்கு சீருடைப்படியாக தலா ரூ. 1,200/—வீதம் ரூ 4,800/—ம் ஆக மொத்தம் ரூ 18,300/— வழஙகப்பட வேண்டும். எனவே தொகையை பணியாளர்களுக்கு வழஙகவும் மேற்படி தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எச்2/1909/15 | குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 6)தூத்துக்குடி மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண். 34,43,47க்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவமழையின் போது சேதமடைந்த சாலைகளை பொது மக்கள் பயன்பாட்டிற்கு தற்காலிகமாக Granular sub base கொண்டு சீரமைக்க மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ 4,67,816/— செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் பதிவு செய்யலாம். மதிப்பீடு எண். 164எ/14—15 | 127) பதிவு செய்யப்பட்டது |
| | 7)தூத்துக்குடி மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண். 35, 36க்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவமழையின் போது சேதமடைந்த சாலைகளை பொது மக்கள் பயன்பாட்டிற்கு தற்காலிகமாக Granular sub base கொண்டு சீரமைக்க மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ 4,41,729/— செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் பதிவு செய்யலாம். மதிப்பீடு எண். 165எ/14—15 | 128)பதிவு செய்யப்பட்டது |
| | 8) தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டலம் அழகேசபுரம் கிழக்கு பகுதியில் குடிநீர் விநியோகத்திற்கு வால்வுகள் அமைக்கும் பணி செய்ய குடிநீர் அவசர அவசியம் கருதி மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ. 55,000/— செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் பதிவு செய்யலாம். மதிப்பீடு எண்.30/15—16 | 129) பதிவு செய்யப்பட்டது |
| | 9) தூத்துக்குடி மாநகராட்சி 3 நகர் நல மையஙகளில் உள்ள அலுவலர்களுக்கு டெஙகு காய்ச்சல் தடுப்பு பணி மற்றும் கள ஆய்வு பணி மேற்கொள்ளும் பொருட்டு அவசர அவசியத்தை முன்னிட்டு மன்றம் தனது தீர்மானம் எண். 116 நாள் 25.8.2014ம் தேதிய அனுமதிக்கப்பட்ட தொகையின் கீழ் மூன்று வாகனஙகள் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளது. மேற்கண்ட வாகனஙகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட விலை விகிதத்தை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள வெர்ஜின் டிராவல்ஸ் அவர்களுக்கு மூன்று மாதம் காலம் உபயோகப்படுத்திடும் வகையில் டீசல் மற்றும் வாடகை உட்பட அதற்கு உரிய செலவுத் தொகை ரூ. 2,24,017/— ஐ மன்றம் அனுமதிக்கலாம். மேலும் தற்போது நகர் நல அலுவலர் அவர்களின் வாகனம் பழுதடைந்து விட்டதால் வாகனம் சரிசெய்து வரும் வரை ஏற்கனவே அமர்த்தப்பட்ட 3 வாகனஙகளில் ஒரு வாகனம் மட்டும் இம்மாநகராட்சி நகர் நல அலுவலர் அவர்களின் அலுவலக உபயோகத்திற்காக பயன்படுத்திட மன்றம் அனுமதிக்கலாம். அதற்கான செலவுத் தொகை ரூ. 71,178/—க்கு | 130) அலுவலக குறிப்புப் படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு–** மாமன்றம் அனுமதிக்கலாம். இ5/8630/2014 | |
| | 10) இம்மாநகராட்சி தெற்குமண்டலத்திற்குட்பட்ட வார்டு எண். 52, 53–ல் உள்ள கீழத்தெரு மற்றும் அய்யன்கோவில் தெருவில் உள்ள இடுகாடு பராமரிக்கும் பணிக்கு உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி 2014–2015ன் கீழ் அனுமதிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் 31.3.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.<br><br>1)திரு பி. ஜெபர்சன் சாமுவேல் ராஜ், மதிப்பீட்டை விட 5.29% அதிகம் (ரூ. 29,31,323/–)<br>ஒப்பந்தக்காரர்<br><br>2)திரு.எஸ்.ரம்போலா , மதிப்பீட்டை விட 11.07 % அதிகம் (ரூ.30,92,097/–)<br>ஒப்பந்தக்காரர்<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகம் கொடுத்துள்ளார்கள். மேலும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்த ஒப்பந்தக்காரர் திரு பி. ஜெபர்சன் சாமுவேல் ராஜ், (மதிப்பீட்டை விட 5.29% அதிகம் ரூ 29,31,323/–)அவர்களிடம் விலைகுறைப்பு கேட்கப்பட்டதில் (மதிப்பீட்டை விட 2.99 %அதிகம் (ரூ.2867102/– அதிகம் கொடுத்துள்ளார். மேற்கண்ட பணிகள் உடன் செய்யவேண்டிய சூழ்நிலையில் இருப்பதால் பொறியியல் கையேடு சேப்ட்டர் II எண் 2.7.2ல் பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு மதிப்பீட்டை விட 5.00 சதவீதம் அதிகம் கொடுக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அவசர அவசியத்தை முன்னிட்டு மதிப்பீட்டை விட 2.99 சதவிதம் அதிகம் கொடுத்ததை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br><br>1) உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி 2014–2015ன் கீழ் அனுமதிக்கப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி திட்டத்தின் கீழ் வார்டு எண். 52, 53ல் கீழத்தெரு மற்றும் அய்யன்கோவில் தெருவில் உள்ள இடுகாடு பராமரிப்பு செய்யும் பணிக்கு அனுமதிக்கலாம்.<br>3) மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்<br>4) மேற்கண்ட பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ 31.00 லட்சம் அனுமதிக்கலாம்.<br><br>மதிப்பீட்டு எண் 258/14–15 | 131) அலுவலகக் குறிப்பு 1,2,3 மற்றும் 4 அனுமதிக்கப்பட்டது |
| | 11) தூத்துக்குடி மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட குத்தகை இனஙகளை 2013–2016ம் ஆண்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இனம் கட்டணம் சரி வர வசூல் செய்ய முடியாததால் 2015–2016ம் ஆண்டு உரிமம் தொகை செலுத்தாமல் உரிமத்திலிருந்து விலகிக்கொள்ளவதாக உரிமதாரர் விண்ணப்பம் செய்துள்ளார். 2013–2016ம் ஆண்டிற்கான ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையில் பக்கம் எண். 06, நிபந்தனை எண் 14ல் தெரிவித்துள்ளபடி உரிமம்தாரர் மாநகராட்சியுடன் தொடர்ந்து மூன்றாண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்து உரிமம் எடுத்துள்ள நிலையில் மேற்படி உரிமம்தார் | 132) அலுவலக குறிப்புப் படி அனுமதிக் கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>
மூன்றாண்டுகளுக்கு முன்னதாக உரிமத்தை விட்டு சென்றாலோ மாநகராட்சிக்கு உரிமம்தாரரால் இழப்பு ஏற்பட்டதாக மாநகராட்சி ஆணையர் கருதினாலோ சம்பந்தப்பட்டட உரிமம்தாரரரின் வைப்புத்தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகையை பறிமுதல் செய்யவும் நீதிமன்றம் மூலம் குற்றவியல் நடவடிக்கை எடுக்கவும் ஆணையர் மற்றும் மாமன்றத்திற்கு முழுமையான அதிகாரம் உண்டு என்ற ஏல நிபந்தனையின்படி கீழ்க்கண்ட நபர் செலுத்திய வைப்புத்தொகையை பறிமுதல் செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>உரிமம் இனம்</th><th>ஊரிமம்தாரர் பெயர் மற்றும் முகவரி</th><th>பறிமுதல் செ வேண்டிய தொகை</th></tr>
<tr><td>1</td><td>மாசிலாமணி பூஙகா அருகில் உள்ள கட்டணக்கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்</td><td>எம்.மாரி கணேஷ் சாம்ராஜ்<br>107சி முத்து தெரு, தூத்துக்குடி.</td><td>15,000/–</td></tr>
</table>
அலுவலக குறிப்பு – மாமன்றம் அனுமதிக்கலாம். அ16/20353/2012
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>
12. இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மலேரியா தடுப்பு திட்டத்தின் சார்பாக, கொசுக்களால் பரவும் நோய்களான டெஙகு மற்றும் மலேரியா போன்றவற்றினை தடுக்கும் பொருட்டு கொசுப்புழுக்களை கட்டுபடுத்தும் புகை மருந்து தெளிக்க பயன்படுத்தப்படும் வாகனத்திற்கு டீசல் மற்றும் பெட்ரோல் செலவினத்திற்கு அவசர அவசியம் கருதி வாஙகவும் அதற்காக ஏற்படும் உத்தேச செலவுத்தொகை (ரூ. 600000/–) மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
அலுவலகக் குறிப்பு – மாமன்றம் அனுமதிக்கலாம். எச்2/9462/12
</td>
<td>133) அலுவலக குறிப்புப் படி அனுமதிக் கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>
13) இம்மாநகராட்சி மேற்குமண்டலத்திற்குட்பட்ட மணிநகர் முதல் மாணிக்கம் டவர் வரை மழைநீர் வடிகால் மற்றும் நடைபாதை அமைக்கும் பணிக்கு 6/5/2015 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு தொழில்நுட்ப உறை திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப கூட்டப்பொருள் ஒப்புதல் பெறப்பட்டது. அதன் அடிப்படையில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விலைப்புள்ளி உறை திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.<br><br>
1)திரு எஸ்.இன்னாசிமுத்து ஒப்பந்தக்காரர் — மதிப்பீட்டை விட 09.76% அதிகம் (ரூ.4079125 /–)<br><br>
2)திரு.திரிகே பில்டர்ஸ் , ஒப்பந்தக்காரர் — மதிப்பீட்டை விட 05.18 % அதிகம் (ரூ.3909114/–)<br><br>
வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட அதிகம் கொடுத்துள்ளார்கள். மேலும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்த ஒப்பந்தக்காரர் திரு திரிகே பில்டர்ஸ் (மதிப்பீட்டை விட 5.18% அதிகம் ரூ3909114/)அவர்களிடம் விலைகுறைப்பு கேட்கப்பட்டதில் (மதிப்பீட்டை விட 2.03 %அதிகம் (ரூ.3791855/– அதிகம் கொடுத்துள்ளார். மேற்கண்ட பணிகள் உடன் செய்யவேண்டிய சூழ்நிலையில் இருப்பதால் பொறியியல் கையேடு சேப்ட்டர் II எண் 2.7.2ல் பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு மதிப்பீட்டை விட 5.00 சதவீதம் அதிகம் கொடுக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மதிப்பீட்டை விட 2.03 சதவிதம் அதிகம் கொடுத்ததை
</td>
<td>134) அலுவலக குறிப்புப் படி அனுமதிக் கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு – ** மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம் . மதிப்பீட்டு எண் 197/14–15 | |
| | **14)** இம்மாநகராட்சி மேற்குமண்டலத்திற்குட்பட்ட பாளை ரோடு மாணிக்கம் டவர் முதல் ஜெயராஜ் ரோடு வரை மழைநீர் வடிகால் மற்றும் நடைபாதை அமைக்கும் பணிக்கு **6/5/2015** அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு தொழில்நுட்ப உறை திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப கூட்டப்பொருள் ஒப்புதல் பெறப்பட்டது. அதன் அடிப்படையில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விலைப்புள்ளி உறை திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.<br><br>**1)**திரு எஸ்.இன்னாசிமுத்து ஒப்பந்தக்காரர் — மதிப்பீட்டை விட **09.73%** அதிகம் (ரூ.**3253625 /–**)<br><br>**2)**திரு.திரிகே பில்டர்ஸ் , ஒப்பந்தக்காரர் — மதிப்பீட்டை விட **05.18 %** அதிகம் (ரூ.**3118669/–**)<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட அதிகம் கொடுத்துள்ளார்கள். மேலும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்த ஒப்பந்தக்காரர் திரு திரிகே பில்டர்ஸ் (மதிப்பீட்டை விட **5.18%** அதிகம் ரூ**3118669/**)அவர்களிடம் விலைகுறைப்பு கேட்கப்பட்டதில் (மதிப்பீட்டை விட **2.05 %**அதிகம் (ரூ.**3025953/–** அதிகம் கொடுத்துள்ளார். மேற்கண்ட பணிகள் உடன் செய்யவேண்டிய சூழ்நிலையில் இருப்பதால் பொறியியல் கையேடு சேப்ட்டர் II எண் **2.7.2**ல் பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு மதிப்பீட்டை விட **5.00** சதவீதம் அதிகம் கொடுக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மதிப்பீட்டை விட **2.05** சதவிதம் அதிகம் கொடுத்ததை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம் .<br><br>மதிப்பீட்டு எண் **195/14–15** | **135)** அலுவலக குறிப்புப் படி அனுமதிக் கப்பட்டது |
| | **15)**இம்மாநகராட்சி மேற்குமண்டலத்திற்குட்பட்ட விவிடி சாலை சந்திப்பு முதல் மணிநகர் வரை மழைநீர் வடிகால் மற்றும் நடைபாதை அமைக்கும் பணிக்கு **6/5/2015** அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு தொழில்நுட்ப உறை திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப கூட்டப்பொருள் ஒப்புதல் பெறப்பட்டது. அதன் அடிப்படையில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விலைப்புள்ளி உறை திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.<br><br>**1)**திரு எஸ்.இன்னாசிமுத்து ஒப்பந்தக்காரர் — மதிப்பீட்டை விட **09.69%** அதிகம் (ரூ.**4266875 /–**)<br>**2)**திரு.திரிகே பில்டர்ஸ் , ஒப்பந்தக்காரர் — மதிப்பீட்டை விட **05.17 %** அதிகம் (ரூ.**4091003/–**)<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட அதிகம் கொடுத்துள்ளார்கள். மேலும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்த ஒப்பந்தக்காரர் திரு திரிகே பில்டர்ஸ் (மதிப்பீட்டை விட **5.17%** அதிகம் ரூ**40,91,003/**)அவர்களிடம் விலைகுறைப்பு கேட்கப்பட்டதில் (மதிப்பீட்டை விட **2.01 %**அதிகம் | **136)** அலுவலக குறிப்புப் படி அனுமதிக் கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | (ரூ.39,68,070/– அதிகம் கொடுத்துள்ளார். மேற்கண்ட பணிகள் உடன் செய்யவேண்டிய சூழ்நிலையில் இருப்பதால் பொறியியல் கையேடு சேப்ட்டர் II எண் 2.7.2ல் பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு மதிப்பீட்டை விட 5.00 சதவீதம் அதிகம் கொடுக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மதிப்பீட்டை விட 2.01 சதவிதம் அதிகம் கொடுத்ததை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம் மதிப்பீட்டு எண் 194/14–15 | |
| | 16) தூத்துக்குடி மாநகராட்சி தெற்கு மண்டலம் முத்தையாபுரம் மெயின் சாலையில் உள்ள பம்ப் ரூம் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி பராமரிப்பு பணி செய்ய குடிநீர் அவசர அவசியம் கருதி மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ. 4,40,619/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** – மாமன்றம் பதிவு செய்யலாம். மதிப்பீடு எண். 30/ 15–16 | 137) பதிவு செய்யப் பட்டுள்ள து |
| | 17) தூத்துக்குடி மாநகராட்சி பகுதி குடிநீர் விநியோகத்திற்கு வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து பம்பிங செய்யப்படும் 400 mm C1 மெயினில் இராஜான்குளம் பகுதி பெடஸ்டல் பகுதியில் ஏற்பட்ட, உடைப்பை சரி செய்ய குடிநீர் அவசர அவசியம் கருதி மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ. 62244/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** – மாமன்றம் பதிவு செய்யலாம். மதிப்பீடு எண். 24A/ 15–16 | 138) பதிவு செய்யப் பட்டது |
| | 18) தூத்துக்குடி மாநகராட்சியில் கணக்கராகப் பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 30.06.2015ல் பணியிலிருந்து ஓய்வு பெற்ற திரு.பி. இராமலிங்கம் என்பவருக்கு அன்னார் பணிபுரிந்த காலத்தில் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை மற்றும் மேற்படி தொகைக்குரிய வட்டி மற்றும் அரசு மான்யத் தொகை ஆகியவற்றை அடியிற்கண்ட விவரப்படி அன்னாருக்கு வழங்கப்படவேண்டியுள்ளது<br><br>1. சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ. 2960/–<br>2.வட்டித் தொகை ரூ.17893/–<br>3.அரசு மான்யத் தொகை ரூ.10000/–<br>––––––––––<br>30853/–<br>––––––––––<br><br>மேற்கண்ட தொகை ரூ 30853/– ஐ (ரூபாய் முப்பதாயிரத்து எண்ணூற்று ஐம்பத்து மூன்று மட்டும்) மாநகராட்சி பொது நிதியிலிருந்து அன்னாருக்கு வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். சி1/1902/2015 | 139) அலுவல கக் குறிப்பு படி அனுமதி க்கப் பட்டது |

**19)** இம்மாநகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் நகர சுகாதார செவிலியர்கள் மற்றும் துப்புரவு ஆய்வராக பணிபுரிந்து முறையே வயது முதிர்வு மற்றும் சுயவிருப்ப ஓய்வு காரணமாக ஓய்வு பெற்றுள்ள கீழ்க்கண்டுள்ள பணியாளர்களுக்கு சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை, வட்டி மற்றும் மாநகராட்சியின் பங்கீட்டுத்தொகை ஆகியவை கணக்கிடப்பட்டு கீழ்க்கண்டுள்ளவாறு வழங்க வேண்டியுள்ளது.

| வ.எண். | பணியாளர்களின் பெயர்கள் திரு/திருமதி | பணியில் சேர்ந்த நாள் | ஓய்வு பெற்ற தேதி | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை ரூ. | வட்டி ரூ. | பங்கீட்டுத் தொகை | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | திருமதி. பொன்னம்மாள் | 22.2.1993 | 30.6.2014 | 2960 | 6956 | 10000 | 19916 |
| 2 | திருமதி. பவானி | 28.11.1998 | 31.5.2014 | 2960 | 9531 | 10000 | 22491 |
| 3 | திருமதி. மல்லிகா | 28.11.1994 | 31.1.2015 | 2960 | 5934 | 10000 | 18894 |
| 4 | திரு. திருமால்சாமி | 05.10.1989 | 22.3.2014 | 2960 | 8461 | 10000 | 21421 |

எனவே பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள ஓய்வு பெற்ற நகர சுகாதார செவிலியர்கள் மற்றும் துப்புரவு ஆய்வர் ஆகிய பணியாளர்களுக்கு மேற்கண்ட தொகையினை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து வழங்க மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். எச்1/3234/15

**140)** அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப் பட்டது.

**20.** தூத்துக்குடி மாநகராட்சி பகுதி வார்டு எண். 34 முதல் 47 முடியவுள்ள பகுதிகளிலுள்ள குடிநீர் பிரதான மற்றும் பகிர்மான குழாய்கள் கசிவு சரிசெய்தல், குடிநீரில் கழிவுநீர் கலப்பதை சரி செய்தல் மற்றும் இதர குடிநீர் பணிகளை ஆறுமாத காலத்திற்கு மேற்கொள்ள மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ. 296595/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் பதிவு செய்யலாம். 136 A /14–15

**141)** பதிவு செய்யப் பட்டது

**21.** தூத்துக்குடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களுக்கு அச்சுறுத்தலாகவும், போக்குவரத்திற்கு இடையூறாகவும் சுற்றித்திரியும் தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி போடும் பணி மாமன்ற அனுமதி பெற்று ஏற்கனவே நடந்து முடிவடைந்துள்ளது. இந்த நிலையில் மேலும் இப்பணியினை தீவிரமாக மேற்கொண்டு மாநகரில் தெரு நாய்களை கட்டுப்படுத்த இவ்வாண்டு 2000 (இரண்டாயிரம்) தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி போடும் பணியினை செய்வதற்கு ஏற்கனவே இதற்கு முன்பு பார்த்து வந்த மெசர்ஸ் ராஜேஸ்வரி கோசலா டிரஸ்ட் என்ற நிறுவனம் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**142)** அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப் பட்டது

| | | |
|---|---|---|
| | **அலுவலகக் குறிப்பு–** மாமன்றம் அனுமதிக்கலாம். **எச்2/11640/10** | |
| | **22.** இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் கீழ் தற்பொழுது வரவுள்ள பருவ மழை காலத்தை முன்னிட்டு இம்மாநகராட்சி பகுதிகளில் பொதுமக்கள் கூடும் இடங்கள், பேருந்து நிலையங்கள், பொதுக்கழிப்பிடங்கள், அலுவலக கழிப்பிடங்கள், மழைநீர் மற்றும் குப்பைகளை அகற்றிய பின் அந்த இடங்களை சுத்தம் செய்யவும், தொற்று நோய்கள் பரவா வண்ணம் பராமரிப்பதும் மிகவும் அத்தியாவசியமானதாகும். எனவே மேற்படி பணிகளுக்கு தேவையான பிளீச்சிங பவுடர், சுண்ணாம்புத்தூள், கருப்பு பினாயில் மற்றும் வாசனை பினாயில் போன்ற கிருமி நாசினிகளை அவசர அவசியம் கருதி வாங்கி பயன்படுத்திக்கொள்ளவும், அதற்காகும் செலவுத் தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு–** மாமன்றம் அனுமதிக்கலாம். **எச்2/4792/14** | **143)** அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப் பட்டது |
| | **23)** தூத்துக்குடி மாநகராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக **31.5.2015**ல் பணியிலிருந்து ஓய்வு பெற்ற திரு.V. முருகேஸ்வரன் என்பவருக்கு அன்னார் பணிபுரிந்த காலத்தில் அன்னாரின் ஊதியத்தில் இருந்து பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநல நிதி தொகை அதற்கான வட்டி தொகை மற்றும் அரசு மானியத் தொகை ஆகியவற்றை கீழ்க்கண்ட விபரப்படி தனியருக்கு வழஙகப்பட வேண்டியுள்ளது.<br><br>1. சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் ரூ. **2960/–**<br>**2.**அதற்கான வட்டி தொகை ரூ. **9828/–**<br>**3.** அரசு மானியத் தொகை ரூ.**10000/–**<br>––––––––<br>மொத்தம் ரூ. **22788/–**<br>––––––––<br><br>மேற்கண்ட தொகையில் வட்டி தொகை மற்றும் அரசு மானியத் தொகை ரூ **19828/–** ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து தனியருக்கு வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். **50/2015/**சி**2** | **144)** அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப் பட்டது |
| | **24)** இம்மாநகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை சார்ந்த பணிகள், மலேரியா பிரிவு களப்பணியாளர்களால் மேற்கொள்ளப்படும் கொசு ஒழிப்பு பணிகள் போன்ற அத்தியாவசிய பணிகளுக்கு பயன்படுத்தப்படும் மாநகராட்சி துப்புரவு பணியாளர்கள், மலேரியா பிரிவு களப்பணியாளர்களுக்கு மழைக்காலஙகளில் களப்பணி மேற்கொள்ள பாதுகாப்பு உபகரணஙகள் (மழைக்கவசம்) தேவைப்படுவதால் அவசர அவசியம் கருதி தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் வாஙகுவதற்கும் அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ. **4.00** இலட்சத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம். **எச்2/14274/2012** | **145)** அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப் பட்டது |
| | **25)** தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் இணைக்கப்பட்டுள்ள **5** ஊராட்சிகளான முத்தையாபுரம், சஙகரப்பேரி, தூத்துக்குடி ரூரல், மீளவிட்டான் மற்றும் அதிதிமரப்பட்டி ஆகிய பகுதிகளில் சொத்து வரி நிர்ணயம் செய்தல் தொடர்பாக இம்மாமன்ற தீர்மான எண். 74 நாள் **30.04.2012**ல் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள ஊராட்சிகளுக்கு ஏற்கனவே | **146)** அலுவலகக் குறிப்பு |

| | | |
|---|---|---|
| | ஊராட்சிப் பகுதியில் நிர்ணயம் செய்யப்பட்ட சொத்து வரியினை தொடர்ந்து வசூலிக்க அனுமதி வழங்கப்பட்டது.<br><br>இந்நிலையில் மேற்படி காலம் முடிவடைந்துள்ளதால் மாநகராட்சியின் வருவாயை பெருக்கும் விதமாக 2015—2016ம் நிதியாண்டு முதல் நடைமுறையில் உள்ள விதிமுறைகளின்படி சொத்து வரி நிர்ணயம் செய்ய ஏதுவாக முந்தைய ஊராட்சி பகுதியில் அமைந்துள்ள மிகப் பெரிய ஸ்டெர்லைட் தொழிற்சாலைக்கு சதுர அடிக்கு ரூ.1.00 (ரூபாய் ஒன்று) என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே ஏற்கனவே நிர்ணயம் செய்த சொத்து வரியினை ரத்து செய்து வருவாயை அதிகரிக்கும் பொருட்டு மறு சீராய்வு செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** — மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>அ1/16231/2009 | படி அனுமதிக்கப் பட்டது |
| | **26)** தூத்துக்குடி மாநகராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக **31.05.2015**ல் பணியிலிருந்து ஓய்வு பெற்ற திரு.S. சீனிவாசன் என்பவருக்கு அன்னார் பணிபுரிந்த காலத்தில் அன்னாரின் ஊதியத்தில் இருந்து பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநல நிதி தொகை அதற்கான வட்டி தொகை மற்றும் அரசு மானியத் தொகை ஆகியவற்றை கீழ்க்கண்ட விபரப்படி தனியருக்கு வழஙகப்பட வேண்டியுள்ளது.<br><br>1. சிறப்பு சே மநல நிதி சந்தா தொகை பிடித்தம் ரூ. **2960/—**<br>**2.**அதற்கான வட்டி தொகை ரூ. **13977/—**<br>**3.** அரசு மானியத் தொகை ரூ.**10000/—**<br>————————<br>மொத்தம் ரூ. **26937/—**<br>————————<br><br>மேற்கண்ட தொகையில் வட்டி தொகை மற்றும் அரசு மானியத் தொகை ரூ **23977/—** ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து தனியருக்கு வழஙக மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு —** மாமன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 48/2015/சி2 | **147)** அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப் பட்டது |
| | **27)** தூத்துக்குடி மாநகராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக **31.5.2015**ல் பணியிலிருந்து ஓய்வு பெற்ற திரு.S. ரஞ்சன் என்பவருக்கு அன்னார் பணிபுரிந்த காலத்தில் அன்னாரின் ஊதியத்தில் இருந்து பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநல நிதி தொகை அதற்கான வட்டி தொகை மற்றும் அரசு மானியத் தொகை ஆகியவற்றை கீழ்க்கண்ட விபரப்படி தனியருக்கு வழஙகப்பட வேண்டியுள்ளது.<br><br>1. சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் ரூ. **2960/—**<br>**2.**அதற்கான வட்டி தொகை ரூ. **18291/—**<br>**3.** அரசு மானியத் தொகை ரூ.**10000/—**<br>————————<br>மொத்தம் ரூ. **31251/—**<br>————————<br><br>மேற்கண்ட தொகையில் வட்டி தொகை மற்றும் அரசு மானியத் தொகை ரூ **28291/—** ஐ | **148)** அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | மாநகராட்சி பொது நிதியிலிருந்து தனியருக்கு வழஙக மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 49/2015/சி2 | |
| | 28) தூத்துக்குடி மாநகராட்சி கிழக்குபகுதிகளான, போல்டன்புரம், சிவந்தாகுளம், தாமோதர நகர் மற்றும் அதனை சார்ந்த பகுதிகளிலுள்ள கழிவுநீர் திறந்த வடிகால் மூலம் ஜார்ஜ் ரோடு, பாத்திமா நகர் (புல்தோட்டம் முன்புறம்) தெற்கு காட்டன் சாலை வழியாக பீச்ரோடு வரை சென்று வடிகிறது.<br><br>மேற்படி வடிகால் தற்போது சென்று கொண்டிருக்கும் பாதையில் பாத்திமா நகர் பகுதியில், தனி நபரான திருமதி. சரஸ்வதி என்பவருக்கு பாத்தியப்பட்ட இடம் வாதியின் வழக்கின் 5ம் தபசில் சொத்து வழியே செல்கிறதென்றும் மேற்படி வடிகாலை அப்புறப்படுத்துமாறு தூத்துக்குடி முதன்மை மாவட்ட உரிமை நீதிமன்றத்தில் வழக்கு எண். (O.S.No. 159/2007)ன் படி வழக்கு தொடர்ந்து மேற்படி வழக்கு மனுதாரருக்கு சாதகமாக தீர்ப்பு 13.12.2007 அன்று சொல்லப்பட்டு, அதன் பின் அத்தீர்ப்பினை எதிர்த்து மாநகராட்சியால் தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கு எண். A.S. 70/2008 வழக்கும் 17.10.2012ல் தள்ளுபடி செய்யப்பட்டு, இறுதியாக மாவட்ட முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட E.P.No.64/2013 நாள் 08.04.2015, தீர்ப்பில் மேற்படி இடத்தில் செல்லும் வடிகாலை மனுதார் நீதிமன்ற ஊழியர்கள் முன்னிலையில் அப்புறப்படுத்தி கொள்ளுமாறும் அதற்குரிய செலவினத்தை மாநகராட்சியிடம் பெற்றுக்கொள்ளவும் தீர்ப்பு வழஙகப்பட்டுள்ளது.<br><br>அதனடிப்படையில் 27.04.2015 அன்று நீதிமன்ற ஊழியர்கள் முன்னிலையில் மேற்படி வடிகால் அடைக்க மனுதாரரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு விட்டது.<br><br>மேற்படி வடிகால் செல்லும் இடம் மனுதாரரின் சொந்த இடம் என தீர்ப்பு சொல்லப்பட்டு விட்ட சூழ்நிலையில், மாநகராட்சி ஆணையர், பொறியாளர் அவர்களால் மாற்று இடம் தேர்வு செய்ய அறிவுறுத்தப்பட்டு அதன்படி வேறு இடவசதியில்லாததால் மேற்படி வடிகாலை நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான ஜார்ஜ் ரோடு வழியே கொண்டு செல்ல, மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணியை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 75.00 லட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு–** மேற்படி பணி அவசியமான பணியாக இருப்பதால் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ம.ப.எண்.117/15–16 | 149) அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப் பட்டது |
| | 29)தூத்துக்குடி மாநகராட்சிப்பகுதி வார்டு எண்22 குரூஸ்புரம் பகுதியில் அமைக்கப்பெற்றுள்ள மாநகராட்சி சமுதாய நலக்கூடம் மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி சமுதாயநல கூடத்தில் பொது மக்கள் வீட்டு விசேஷ நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு ஏதுவாக சமையல் கூடம் மற்றும் உணவுகூடம் ஆகியன அமைத்து தரகேட்டு மேற்படி பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.<br><br>எனவே மேற்படி குரூஸ்புரம் மாநகராட்சி சமுதாய நலகூடத்தில் பொது மக்களின் நலன்கருதி சமையல்கூடம் மற்றும் உணவு கூடம் ஆகியன கட்டுவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட செலவினம் மாநகராட்சி பொது நிதியிலிருந்து | 150) அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு.** மாமன்றம் அனுமதிக்கலாம் இ1 / 3476 / 2015 | |
| | **30).**தூத்துக்குடி மாநகராட்சியானது **05/08/2008** முதல் தரம் உயர்த்தப்பட்டு, முத்தையாபுரம், அத்திமரப்பட்டி, மீளவிட்டான், சஙகரப்பேரி, தூத்துக்குடி ரூரல் ஆகிய **5** பஞ்சாயத்துகளை இணைத்து **60** வார்டுகளை உள்ளடக்கி **25/10/2011** முதல் புதிய உள்ளாட்சி உறுப்பினர்களை தேர்வு செய்து மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது. மாநகராட்சியில் உள்ள மழைநீர் வடிகால் **193.95** கி.மீ நீளம் கொண்டதாகும்.<br><br>மழை காலஙகளில் மாநகராட்சிப்பகுதியில் உள்ள வடிகாலில் மழைநீர் சீராக செல்லாமல் மண் மற்றும் குப்பைகள் சேர்ந்து கழிவுநீர் தேஙகி சுகாதார சீர்கேடு விளைவிக்கிறது. மேலும் மேற்படி வடிகாலில் உள்ள குப்பைகள் சுத்தம் செய்யும் பணியினை குறைந்த எண்ணிக்கையிலான மாநகராட்சி துப்புரவு பணியாளர்களை கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br>எனவே போதிய எண்ணிக்கையிலான துப்புரவு பணியாளர்கள் இல்லாத காரணத்தினாலும், மழை காலஙகளில் வடிகாலில் ஏற்படும் கழிவு நீர் தேஙகி சுகாதார கேடு விளைவிப்பதை தடுக்கும் பொருட்டும், பொது மக்களின் சுகாதார நலன் கருதி அன்றாடம் மேற்படி வடிகால் சுத்தம் செய்யும் பணியினை மேற்கொள்ள ஏதுவாக மினி டிராக்டருடன் கூடிய ஜேசிபி இயந்திரம் வாஙகுவது அத்தியாவசியமாகிறது.<br><br>எனவே மாநகராட்சி பகுதியில் உள்ள வடிகால் சுத்தம்படுத்தும் பணிக்கு மினி டிராக்டருடன் கூடிய ஜேசிபி இயந்திரம் மாநகராட்சி பொது நிதியில் இருந்து வாஙகுவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு–** பொது மக்களின் சுகாதார நலன் கருதி மினிடிராக்டருடன் கூடிய ஜேசிபி இயந்திரம் மாநகராட்சி பொது நிதியில் இருந்து வாஙகுவதற்கு மாமன்றம்அனுமதிக்கலாம்.<br>இ1/ 3475 / 2015 | **151)** அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப் பட்டது |
| | **31)** தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட புறநகர் பகுதிகளில் பூஙகாவிற்கென ஒதுக்கப்பட்ட இடஙகளில் புறநகர் பகுதி பொது மக்கள் மற்றும் வயோதிகர்கள் நடைபயிற்சி மேற்கொள்ள ஏதுவாக நடைபாதை அமைக்கவும் , சிறுவர்,சிறுமியர்கள் பொழுது போக்குவதற்கு ஏதுவாக விளையாட்டு உபகரணஙகள், வண்ணசெடிகள், புல்விரிப்புகள் ஆகியன மேற்படி பூஙகாக்களில் அமைத்திடவும், மாநகர் பகுதியினை அழகுபடுத்தும் விதமாக மாநகராட்சியின் நடுவில் அமையப்பெற்றுள்ள சுமார் **7.28** கி.மீ நீளத்தில் உள்ள பக்கிள் ஓடையின் இருமருஙகிலும் சாலைகள் அமைத்து கைப்பிடியுடன் கூடிய நடைபாதை அமைத்திடவும் விருப்பம் தெரிவிக்கும் தனியார் நிறுவனத்தின் பஙகளிப்புடன் செயல்படுத்திட மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு.** மாநகராட்சி புறநகர் பகுதி பூஙகாக்களில் நடைபாதை அமைத்தல் மற்றும் செடிகள் அமைத்து அழகுபடுத்திடவும், பக்கிள் ஓடையின் இருமருஙகில் கைப்பிடியுடன் கூடிய நடைபாதையுடன் சாலைகள் அமைக்க விருப்பம் தெரிவிக்கும் தனியார் நிறுவன பஙகளிப்புடன் செயல்படுத்த மாமன்றம் அனுமதிக்கலாம். இ1/ 3477 / 2015 | **152)** அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | 32) தூத்துக்குடி மாநகராட்சியின் வார்டு பகுதிகளில் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் பொதுமக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் உள்ள பொது மக்களின் சுகாதாரத்தை பேணி காக்க ஏதுவாக கழிப்பறை வசதி இல்லாத இடஙகளிலும், பொது மக்கள் அதிகம் கூடும் இடஙகளான பழைய மற்றும் புதிய பேருந்து நிலையஙகளிலும் மாநகராட்சி மூலம் நவீன கட்டண கழிப்பறைகளை கட்டுவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட செலவினம் மாநகராட்சியின் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1) வார்டு பகுதிகளில் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் பொது மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் உள்ள பொது மக்களின் சுகாதாரத்தை பேணி காக்க ஏதுவாக கழிப்பறை வசதி இல்லாத இடஙகளிலும், பொது மக்கள் அதிகம் கூடும் இடஙகளான பழைய மற்றும் புதிய பேருந்து நிலையஙகளிலும் மாநகராட்சிமூலம் நவீன கட்டண கழிப்பறைகளை கட்டுவதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்கண்ட நவீன கழிப்பறை கட்டுவதற்கான செலவினம் மாநகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1 / 3478 / 2015 | 153)அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப் பட்டது |
| | 33)தூத்துக்குடி மாநகராட்சிப்பகுதி வார்டு எண் 35, 3வது மைல் பாளை ரோடு மேற்கு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை அருகே புதியதாக பயணிகள் நிழற்குடை ஒன்று லயன்ஸ் கிளப் மூலம் அமைப்பதற்கு அனுமதி கோரியுள்ளர்கள்.<br>எனவே 3வது மைல் பாளை ரோடு மேற்கு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை அருகே புதியதாக பயணிகள் நிழற்குடை ஒன்று தூத்துக்குடி லயன்ஸ் கிளப் மூலம் நிறுவிடவும், அதற்கான செலவினத்தை லயன்ஸ் கிளப் மூலம் மேற்கொள்ளவும், மேலும் நெடுஞ்சாலைத்துறை அனுமதி பெற்று மாநகராட்சி நிபந்தனைகளுக்கு உட்பட்டு அமைக்கவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு.** நிபந்தனைகளுக்கு உட்பட்டு மாமன்றம் அனுமதிக்கலாம்<br>இ1 / 3479 / 2015 | 154)அனுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப் பட்டது |
| | 34) தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு பத்திரகாளியம்மன்கோவில் தெரு நகராட்சி நடுநிலைப்பள்ளி நேரக் கைத்தொழில் ஆசிரியராக பணியாற்றி 30.06.2014ல் வயது முதிர்வு காரணமாக ஓய்வுபெற்ற 1988 வருடம் ஜுலை முதல் 1997 வருடம் பிப்ரவரி முடிய பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி மற்றும் வட்டி தொகை கீழ்க்கண்டவாறு பெற்றுக்கொள்ளலாம். அரசுமானியத்தொகையை கடைசியாக பணிபுரிந்த அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.<br>சிறப்பு சேமநல நிதி சந்தா (20 X 104) ரூ. 2080<br>அதற்கான வட்டித்தொகை ரூ. 11686<br>-------<br>மொத்தம் 13766<br>-------<br>மேற்கண்ட அசல் தொகையும், வட்டித்தொகையும் சேர்த்து ரூ. 13766/-ஐ மாநகராட்சி | 155) அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | பொது நிதியிலிருந்து தனியருக்கு வழஙக மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.சி4/3081/15 | |
| | 35) சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநரக கூடுதல் இயக்குநர் அவர்களின் நேர்முக கடிதத்தில், இந்திய செஞ்சிலுவை சஙகத்திற்கு ஆண்டு சந்தா மாநகராட்சிக்கு ரூ. 5000/– மாநகராட்சியிலிருந்து செலுத்துவதற்கு மாமன்ற கூட்டத்தில் பொருள் வைத்து அதன் விபரத்தை அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தூத்துக்குடி மாநகராட்சி பொது நிதியிலிருந்து இந்திய செஞ்சிலுவை சஙகம் தமிழ்நாடு பிரிவிற்கு ஆண்டு சந்தா ரூபாய். 5000/– செலுத்துவதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு–** அனுமதிக்கலாம். சி4/2015/2015 | 156) அலுவலக குறிப்புபடி அனுமதிக்கப் பட்டது |
| | 36) இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட போல்பேட்டையில் வசிக்கும் (1) திருமதி. J. ஜெஸிந்தா w/o M.A. சேசு பாக்கியம் (2) திருமதி. பாக்கியசீலி பாக்கியம் D/O திருமறை பர்னாந்து (3) திருமதி. பரிபூரணம் (எ) மோட்ச பூரணம் D/O திருமறை பர்னாந்து ஆகிய மூவரும் போல்பேட்டை சர்வே வார்டு B பிளாக் II நகரளவு எண். 36ல் முறையே 741.917 ச.மீ. 368.914ச.மீ. மற்றும் 368.914ச.மீ. இடம் தஙகளுக்கு பாத்தியமானது எனவும் சர்வே ஆவணஙகளில் பொது இடம் என இருப்பதை தஙகளுக்கு பாத்தியமான இடம் என திருத்தம் செய்வது தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றி தரும்படி விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்கள்.<br>மேற்படி மனுதாரர்கள் குறிப்பிடும் இடம் அஙகீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு LP/DTCP No. 177/89 ல் பொது உபயோகத்திற்கு ஒதுக்கப்பட்ட இடமாகும். மேற்கண்ட இடம் தனியார்க்கு பாத்தியமான பொது உபயோகம் கட்டிடம் கட்ட ஒதுக்கீடு செய்யப்பட்ட இடமாகும். மேற்கண்ட மனைப்பிரிவு டி.பி./டிடிபி/டி.கே. எண். 32/73–ஐ மாற்றி அமைக்கப்பட்ட மனைப்பிரிவாகும். மேற்படி மனைப்பிரிவில் பொது மக்கள் பயன்பாட்டிற்கு உபயோகப்படும் வகையில் பள்ளிக்காக ஒதுக்கப்பட்ட இடம் சர்வே வார்டு B பிளாக் 10 TSNo. 27–ல் 1 ஏக்கர் 33 சென்ட் மாநகராட்சிக்கு ஆவணம் எண். 1498.74 நாள் 11.05.74ல் தான பத்திரம் பதிவு செய்து கொடுக்கப்பட்டு மாநகராட்சி பராமரிப்பில் உள்ளது. வார்டு B பிளாக் 11 நகரளவு எண் 36 இடம் மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யவில்லை.<br>சர்வே வார்டு B, பிளாக் II TSNo. 36 ஆனது நகரளவை ஆவணஙகளில் அடஙகல் கலத்தில் சுப்புராஜ் நாடார் பொது இடம் எனவும் குறிப்புரை கலத்தில் பொது ஜன உபயோகம் இடம் (கிரையம்) என உள்ளது. மேற்படி நகரளவு எண் 36 ஆனது 5800சதுர மீட்டர் பரப்பளவு உடையது மேற்படி இடம் பல நபர்களுக்கு கிரையம் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்களுக்கும் சுப்புராஜ் என்பவரிடமிருந்து கிரையம் மூலம் பெறப்பட்டு பாத்தியமாகிறது. மேற்கண்ட இடத்தில் மனுதாரர்கள் பெயரில் வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. நகரளவு எண். 36–ல் 9.00 மீட்டர் அகலத்தில் இரண்டு சாலைகள் 1120 சதுர மீட்டர் பரப்பளவில் மாநகராட்சியால் அமைக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது.<br><br>எனவே மனுதாரர்களுக்கு பாத்தியமான 1479.75 சதுர மீட்டர் இடத்தினை நகர் ஊரமைப்பு துணை இயக்குநரின் அனுமதி பெற்று மனுதாரருக்கு பாத்தியமான பொது உபயோகம் இடம் என நகரளவை ஆவணஙகளில் உட்பிரிவு செய்து திருத்தம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** – அனுமதிக்கலாம். ந.க.எண். 0921/ 2014/எப்1/வ.ம. | 157) அலுவலக குறிப்புபடி அனுமதிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | 37) இம்மாநகராட்சி பராமரிப்பில் உள்ள வல்லநாடு தலைமை நீரேற்று நிலையம் செல்லும் பாதையில் மண்சாலையை தார்சாலையாக மாற்றும் பணிக்கு ரூ. 21.50 இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இம்மாமன்ற தீர்மான எண். 72 நாள் 25.03.2015ல் ஒப்புதல் பெறப்பட்டு 19.06.2015ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.<br><br>1) திரு.ஜெ. சுரேஷ் ஜெயக்குமார் மதிப்பீட்டை விட 0.17 % குறைவு (ரூ. 20,91,526/–)<br>ஒப்பந்தக்காரர், தூத்துக்குடி.<br><br>2)திரு. ஜி.இராஜேந்திரன் மதிப்பீட்டைவிட 0.89 % அதிகம் (ரூ. 21,13,790/–)<br>ஒப்பந்தக்காரர், தூத்துக்குடி<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.17 சதவீதம் குறைவாக (ரூ. 20,91,526/–) கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் திரு. ஜெ. சுரேஷ் ஜெயக்குமார் அவர்களிடம் விலைக்குறைப்பு கேட்கப்பட்டதில் மதிப்பீட்டை விட 0.23 சதவீதம் (ரூ. 20,90,326) கொடுத்துள்ளார். மேற்படி பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்.<br>ம.ப.எண்.287/14–15 | 158) அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப் பட்டது |
| | 38)தூத்துக்குடி மாநகராட்சியின் மூலம் தேசிய நகர்புற வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் நகர்ப்புற வீடற்ற ஏழைகள் கணக்கு எடுக்கப்பட்டது. அவர்களுக்கு உணவு மற்றும் உறைவிடம் கொடுத்து திறன்மேம்பாட்டு பயிற்சி கொடுத்து அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு ரோஜா வனம் என்.ஜி.ஓ. மூலம் தூத்துக்குடி மாநகராட்சியின் மூலம் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒப்பந்தத்தின்படி திறன்மேம்பாட்டு பயிற்சியினை ஐந்து வருடஙகள் நடத்துவதற்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம். <u>எப்6/10381/14</u> | 159) அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப் பட்டது |
| | 39) தூத்துக்குடி மாநகராட்சி, வருவாயை பெருக்கும் வகையில் மாநகராட்சிக்குட்பட்ட பாளை ரோட்டிலுள்ள பொது மையவாடிக்கு தென்புறம் எம்.ஜி.ஆர். பூஙகாவிற்கு கீழ்புறம், எரியூட்டு தகன மேடைக்கு செல்லும் பாதைக்கு மேல்புறம் காலியாக உள்ள (50 X 150= 7500) சதுர அடி இடத்தில் நிறுத்தப்பட்டு வரும் நான்கு சக்கர வாகனஙகளுக்கு மாநகராட்சி மூலம் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் இந்த உரிமத்தை நடைபெற இருக்கும் பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து நடைமுறைப்படுத்தவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம். அ16/20353/2012 | 160) அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப் பட்டது |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் 08.2015

மேயர்
மாமன்றம்,தூத்துக்குடி.